**பாத்தஹேவாஹட்ட பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.

பாத்தஹேவாஹட்ட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாத்தஹேவாஹட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் ரூபா 134,880 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஓய்வூதியம் ரூபா 106,054 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 265,292 ஆன விளம்பர பதாதை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆம் பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 13 மயானங்கள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த அறிவித்தல்களை மேற்கொண்டு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மயானங்கள் கையேற்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (பிறப்பிக்கப்பட்ட உப உறுப்புரை) சட்டம் | | | |
| (i) | முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பான உப உறுப்புரை | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் இடங்களிலிருந்து 2015 முதல் 2022 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 5,554,900 ஆன முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் முறையான நடைமுறையொன்றின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உப உறுப்புரை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | விளம்பர அறிவித்தல் தொடர்பான உப உறுப்புரை | 75 விளம்பர பதாதை களிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 49,319 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத கட்டணங்களுக்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 2012 – 2020 இற்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குரிய ரூபா 2,867,079 பெறுமதியான காலாவதியான 89 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சமரப்பிக்கப்படாத வைப்புக்கள் அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,900,990 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,623,148 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,151,936 | 3,359,800 | 5,889,272 | 4,743,864 | 3,363,599 | 3,187,281 | 3,189,469 | 7,273,336 |
| (ii) | வாடகை | 2,475,925 | 6,674,473 | 6,625,286 | 1,445,897 | 1,840,710 | 4,656,702 | 4,553,006 | 1,396,710 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,203,765 | 2,400,556 | 1,762,856 | 5,554,900 | 2,225,365 | 2,182,133 | 1,765,633 | 4,917,200 |
| (iv) | ஏனைய வருமானம் | 51,043,879 | 51,923,097 | 58,256,724 | 89,634,452 | 49,491,590 | 57,209,320 | 48,195,539 | 95,968,079 |
| | | 58,875,505 | 64,357,926 | 72,534,138 | 101,379,113 | 56,921,264 | 67,235,436 | 57,703,647 | 109,555,325 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 4,094,822 ஆக இருந்ததுடன் அலகொன்றில் வீதவரி நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 114 ஆதனங்களில் மொத்தம் ரூபா 2,852,987 ஆக இருந்தது. | ஆதனங்களை தடை செய்வதன் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 649,041 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று இருந்ததுடன். அதில் ரூபா 40,000 இனை மிகைத்த 7 அலகுகளிலிருந்து ரூபா 432,975 ஆன நிலுவை மீதியொன்று இருந்தது. | தெரியப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 15,517,372 ஆக இருந்ததுடன் அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 456 நீர் பாவனையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா 8,223,574 ஆன நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும் அறவிட முடியாத மீதிகளைப் பதிவழிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமி இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,111,692 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 73,005,388 ஆக இருந்தது. | மாகாண திறைசேரிக்கு நினைவூட்டல் கடிதங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. | முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்ற தண்டப் பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவுப்பொருள் முகாமைத்துவ தொகுதிக்காக பாதுகாப்பு வேலியொன்றை நிர்மாணிக்காமை யால் வன விலங்குகள் கழிவுப் பொருட்களை உணவாக உட்கொள்கின்ற காரணத்தினால் வனவிலங்குகளுக்கும் சேதனப் | வேலியொன்றை நிர்மாணிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | ஆதனங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பசளைத் தொகுதிக்கும் அதில் பாதகமான நிலைமையொன்று உருவாகியிருந்தது. | | |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 93(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுகளை அகற்றுவதற்காக முறையான குழிகளை முெறையான காலப்பகுதியில் சுத்திகரித்தல் மற்றும் வெறுமையாக்குவதற்கான கலி வண்டி சேவையொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | குறித்த சேவையை பேணிச் செல்வதற்கான வசதிகள் சபையிடம் இல்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 202,655 ஆன நிர்மாணக் கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 150,000 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் பணம் மீள்நிரப்பபட வேண்டும். | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,190,466 ஆன கடன் கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 1 இற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய ரூபா 261,500 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் கொடுத்தோர் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் 08 நீர் செயற்திட்டங்களுக்குரிய 3600 நீர் பாவனையாளர்கள் இருந்த போதும் அதில் 3,088 பாவனையாளர்களுக்கு நீர்மானி பொருத்தப்படாதிருந்ததுடன் சரியான நீர்க் கட்டண அறவீடொன்று இடம் பெற்றிருக்கவில்லை. | மணல் கற்கள் இருகியிருந்தமை காரணத்தினால் நீர்மானி செயலற்று இருப்பதால் பொருத்துதல் தாமதமாகியுள்ளது. | நீர்மானி பொருத்தப்பட்டு குறித்த கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 24,976,816 ஆன 15 காணித் துண்டுகளுக்குரிய உரித்தினை உறுதிப்படுத்தும் உரித்துறுதி, வெளிப்படுத்தல் உறுதி, கையளிப்பு கட்டளை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | அளவீட்டு நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையெனவும் காணி சீர்திருத்த ஆணைக்குழு உறுதியை வழங்குவதில் தாமதம். | சட்டரீதியான உரித்து கையேற்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| காணி ஏலவிற்பனைகளிலிருந்து பொது விடயங்களுக்காக சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 32,572,500 ஆன 09 காணிப் பகுதிகள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 19 காணிப்பகுதிகள் பொது விடயங்களுக்கு பயன்படுத்தப்படால் விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன் | எதிர்காலத்தில் பயனுள்ள செயற்பாட்டிற்கு தொடர்புபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | காணிகளை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் ரூபா 4,950,000 ஆன கட்டிடமொன்றும் பெறுமதி கணக்கிட முடியாத 08 கட்டிடங்கள் மற்றும் 05 நீர் செயற்திட்டங்களையும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்தினை கையேற்க வேண்டும் |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் மத்திய மாகாண சுற்றுலா திணைக்களத்தின் மூலம் ரூபா 6,070,,538 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த லூல்கந்துர சுற்றுலா வசதிகள் நிலையம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 15 பேர்சஸ் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அக் காணிக்காக முறையான குத்தகை ஒப்பந்தமொன்று சபையிடம் இருக்கவில்லை. | குறித்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | முறையாக உடன்படிக்கை செய்யப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 10 பதவிகளில் 21 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 11 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகை, அபிவிருத்தி உத்தியோகத்தர்களாவர். | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 04 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலும் 28 செலவின விடயங்களில் 33 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | அபிவிருத்தி திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை பொருட்களின் விலை அதிகரித்தமை மற்றும் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளானமை காரணமாகும். | கவனத்தடனும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்த போதும் அவற்றை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்துதல் வேண்டும். |